மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பிரபாவை ஒப்படைக்குமாறு இந்தியா இலங்கைக்கு

# கடித மூலம் கோரிக்கை

(புதுடில்லி)

முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென இந்திய அரசு இலங்கை அரசுக்கு கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகவலை இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கு முறைப்படி இந்திய அரசு இக்கோரிக்கையை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

பருவ வெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 13 இதழ் 105
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26 — 05 — 199[illegible]

## நாடாளுமன்ற
# சிறப்புரிமைகளை மீறிய எம்.பி.க்கள் மீது விசாரணை

(கொழும்பு)

நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறிய உறுப்பினர்களுக்கு இருவருட சிறைத்தண்டனையை நாடாளுமன்றம் விதிக்கமுடியும் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறியதற்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் விவகாரம் குறித்து ஆராயுமுகமாக விசாரணைகள் விரைவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

(க)

## வவுனியா—செட்டிகுளம் தந்திரிமலையில்

# எட்டு இராணுவ காவலரண்கள் புலிகளால் முற்றுகத் தகர்ப்பு!

## பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

**வவுனியா செட்டிக்குளம் தந்திரிமலை பகுதியில் எட்டு இராணுவக் காவலரண்கள் விடுதலைப்புலிகளால் முற்றுகத் தகர்க்கப்பட்டுள்ளதுடன் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. புலிகளின் தாக்குதலில் ஒரு ராணுவ சிப்பாய் பலியானுர். பலர் காயங்களுடன் தப்பியோடினுர்கள்**

நேற்றுமுன்தினம் மாலை 3–15மணியளவில்செட்டிகுளம் தந்திரிமலைவீதியில்தொடர்ச்சியாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண்களுக்கிடையில் உழவுயந்திரம் ஒன்றில் ரோந்து சென்றுகொண்டிருந்த இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் திடீர் அதிரடித்தாக்குதலொன்றை நடத்தினுர்கள்.

இவ் அதிரடித் தாக்குதலினுல் நிலைகுலைந்த படையினர் காயமடைந்த நிலையில் முகாமிற்கு தப்பியோடினுர்கள்.

இராணுவத்தினரின் பின்வாங்கலைத் தொடர்ந்து புலிகள் எட்டு காவலரண்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ சிப்பாய் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தைமேனிப் பகுதியில் முன்னேறி வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 10–00 மணியளவில் பத்தை

(4ம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர் செல்ல தமிழருக்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியாநகருக்குள் செல்ல தமிழர் மறுக்கப்பட்டுள்ளதுடன் தாண்டிக்குளம் சோதனைக் சாவடியில் 15ற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட தமிழர் கைதுசெய்யப்பட்டும் வருகிறுர்கள்.

[4ம் பக்கம் பார்க்க]

## உணவுப் பொருள்களை
# வடபகுதிக்கு எடுத்துவர வவுனியாவில் அனுமதி பெறலாம்

(வவுனியா)

வவுனியவில் இருந்து தாண்டிக்குளத்திற்கு அப்பால் உள்ள வடபகுதி மாவட்டங்களுக்கு உணவுப பொருட்களை லொறிகளில் எடுத்துச் செல்ல வவுனியா அரசாங்க அதிபரிடம் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களை, முதலில் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுடனும், பின்னர் வவுனியா இராணுவத் தளபதியின் சிபார்சுடனும் கையளிக்க வேண்டும்.

சிபார்சுகளுடன் வரும் விண்ணப்பங்களுக்கு அரசாங்க அதிபர் அனுமதி வழங்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ரி)

# எதிர்க்கட்சி எம். பி.க்கள் குழு மட்டுநகர் விஜயம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் வன்செயல் நடவடிக்கையினுல் இடம்பெயர்ந்து அகதி முகாமில் தங்கியிருக்கும் அகதிகளின் நிலை குறித்து ஆராயுமுகமாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று கடந்த சனிக்

(4ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. [உ.த.] விசேட பரீட்சை
# விடைத்தாள் திருத்தும் பணி 27ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சைக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணி இம் மாதம் 27–ம் திகதி முதல் ஜுன் மாதம் 9–ம் திகதி வரை நடைபெறவிருப்பதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி விடைத்தாள்கள் திருத்தும் பணி பம்பலப்பிட்டி இந்துக கல்லூரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்றும் எனவே மேற்படி பாடசாலைகள் இம்மாதம் 27–ம் திகதி முதல் ஜுன் மாதம் 9–ம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் எனவும் பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(க)

# மட்டு.வாவியில் படகுகவிழ்ந்து 16 தமிழர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கொக்கட்டிச்சோலையில் உள்ள வாவியில் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்ததில், 16தமிழ்ப் பொதுமக்கள் பலியானதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தை அடுத்து, நீரில் மூழ்கிப் பலியானேரின் 8 சடலங்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டதாகவும், ஏனைய சடலங்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க)

# குமாரிகப்பலில் பொருட்களை ஏற்ற மறுப்பு

(யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கடந்த வாரம் கொழும்புக்குச் சென்ற 'குமாரி' கப்பல் எந்த ஒரு பொருட்களையும் இங்கிருந்து ஏற்றிச் செல்லவில்லையென்று கூறப்படுகின்றது.

மேற்படி கப்பலில் ஏற்றுவதற்காக பருத்தித்துறை

(4ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீபெரம்புத்தூரில்
# அமரர் ராஜீவை கண்டித்து துண்டுப்பிரசுரம் வீசப்பட்டன

[சென்னை]

இந்தியாவின் முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கண்டித்து, அவரது முதலாவது நினைவு தினத்தில் ஸ்ரீபெரம்புத்தூரில் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

ராஜீவை 'பாஸிஸவாதி' என்றும், 'இரத்தக்காட்டேரி' என்றும் அத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடந்த 21ம்திகதி ஸ்ரீபெரம்புத்தூரில் ராஜீவின் முதலாவது சிரார்த்ததினம் அனுஷ்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் அங்கு போடப்பட்டிருந்த பாதுகாப்புக் காவலையும் மீறி நுழைந்த வெள்ளைநிற வான் ஒன்றிலிருந்து இத்துண்டுப் பிரசுரங்கள் எறியப்பட்டதாகப் பொலிசார் தெரிவிந்தனர்.

ராஜீவ் காந்தியைக் கொன்ற தனுவை இத்துண்டுப்பிரசுரங்களில் புகழப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ரி)

## தீ விபத்தில்
# தனியார் கல்வி நிறுவனத்தின் கொட்டகைகள் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் இருபெரிய கொட்டகைகள் முற்றுக எரிந்து சாம்பலாகியுள்ளன.

யாழ் மாநகர சபையின் தீயணைக்கும் பகுதியினர், தீ மற்றைய இடங்களுக்குப் பரவாமல் இருப்பதற்காக மிகவும் சிரமப்பட்டுத் தீயை அணைத்தனர்.

(வி)

# வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

ரமணிச்சந்திரன், லக்ஷ்மி, கண்ணதாசன் நாவல்கள் மற்றும் பிறந்ததாள் வாழ்த்து மடல்கள் விற்பனைக்குண்டு 15% சழிவு வழங்கப்படும். 15/5, 27, மின்சார நிலைய வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (எ 2166)

### நோவுவைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவுஎண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி–6256)

### தவறிவிட்டது

கடந்த 23-ந் திகதி அரியாலைக்கும் நுணுவில் 190-ம் கட்டைக்குமிடையில் 400ரூபா காசு, 3 பொக்சி பேனு, 1907 இலக்கமுடையசைக்கள்தகடு, 13672 இலக்கமுடைய வேம்படி மகளிர் கல்லூரி அடையாள அட்டை என்பன கொண்ட பிறவுண் நிற பேஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரியில் முதல் மாடி இல. 25, தனங்களப்பு வீதியில் உள்ள சோதி அச்சகத்தில் தந்துதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (ஏ–2167)

23-5-92 அன்று நாகலிங்கம் பூபாலசிங்கம் என்பவருடைய நீல நிற பாக் பளைக்கும், கொம்படிக்குமிடையில் தவறிவிட்டது. அடையாள அட்டை இல. (381601900X) பாஸ்போட், சாதகம் 3, புங்குடுதீவு நிவாரண அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், மூக்குக் கண்ணாடி என்பன. இதை கண்டெடுத்தவர்கள் பாலவிநாயகர் கடை, [கிளிநொச்சி] or 93/24, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி–6 49)

### கவிஞருக்கு பாராட்டு

கிளிநொச்சி)

கவிஞர் செவ்வந்தி மகாலிங்கத்திற்கு தென்மராட்சி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலக்கியத்துக்கான சிறப்புச் சான்றுப்பட்டம் ஒன்றை வழங்கி கௌரவித்துள்ளனர்.

கவிஞர் செவ்வந்தி மகாலிங்கத்தை கிளிநொச்சி இலக்கிய வட்டமும் பாராட்டியுள்ளது. (83)

### உற்சவம்

(பண்டத்தரிப்பு)


பிரசித்திபெற்ற கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது. (72)

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தருமபுரம் நெத்தலியாற்று ஸ்ரீ முத்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் அடுத்த மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

## நினைவஞ்சலி



மலர்வு: 21 | 05 | 1967

உதிர்வு: 26 | 05 | 1981

### கந்தசாமி இளங்கோ

எங்கள் செல்வமே நீ மறைந்து எட்டு ஆண்டுகள் போனாலும் உன்னை நாங்கள் மறக்கவில்லை. உன் மறைவால் வடு அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், மைத்துனர், மைத்துனிகள், உற்றார், உறவினர் உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

தாய், தந்தை, சகோதரர்கள்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

[சி–6351]

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி அருணாசலம் பரமேஸ்வரி

மலர்வு: 10 06–1924 உதிர்வு: 27–04–1992

திதி: 27 05 1992

எம் இனிய அம்மா, எப்பிறப்பிற்காண்போம்
எம் இனிய அம்மாவை''

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்,
ஓம்சாந்தி சாந்தி சாந்தி

பிள்ளைகள், மருமக்கள்
பேர பிள்ளைகள்

Dr. செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(சி–6352)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



இந்தமண் எங்களின் சொந்தமண்
இந்த மண் மீட்புக்கு நாம் அனைவரும் தயார்!

தாயின் மடியில்: 06.05.1962
தாயக மடியில்: 26.05.1987
திதி: 30.05.1992

வல்வை மண்ணளித்த தியாகவேங்கை
(வீரவேங்கை)

### கப்டன் அலன்

திரு. நடனசிகாமணி பாக்கியலிங்கம்

(சி 6341)

வ. இ. நடனசிகாமணி
இரத்தினேஸ்வரி
குடும்பத்தினர்,
வல்வெட்டித்துறை.

★ வற்றுப்பளை சம்பவம்:

# முல்லையில் பாதுகாப்பில்லை வவுனியாவில் விசாரணை

(கொழும்பு)

முல்லைத்தீவில் பாதுகாப்பில்லை என்பதால் வற்றுப்பளை அம்மன் கோவில் மீதான ஷெல் தாக்குதல் குறித்த விசாரணை வவுனியா கச்சேரியிலேயே நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் டி. ஜி. ஜயலத் தலைமையிலான இக் குழுக்கு பாதுகாப்பு வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாகவே படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா கச்சேரியில் இவ் விசாரணை நடைபெறுகிறதாம்.

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் குறித்து நடைபெற்ற விசாரணையின்போது சாட்சியமளிக்க சென்ற தமிழ் மக்கள் மோசமாக பயமுறுத்தப்பட்டதும், எச்சரிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வற்றுப்பளை சம்பவ விசாரணை இன்று ஆரம்பமாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கால் நடைகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கும் முயற்சியாக கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் வேலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 854 மாடுகளுக்கு எவ்.எம்.டி. கால்வாய் நோய்த் தடுப்பு மருந்தும், 302 மாடுகளுக்கு எச். எஸ். தொண்டையடைப்பான் தடுப்பு மருந்தும் ஏற்றப்பட்டுள்ளது. 2,657 கோழிகளுக்கு ரணிக்கட்டு நோய் மருந்தும் ஏற்றப்பட்டுள்ளதாகவும், இதனுல் கால்நடைகளிடையே நோய் பரவுவதை ஓரளவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்துள்ளது எனவும், போதியளவு கால்நடை மருந்துகள் கொண்டு வரப்படாமையினுல் வழமையான நோய்த்தடுப்பு வேலைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் 2வது அரையிறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் குருநகர் பாடும்மீன் வி.கவை எதிர்த்து சுன்னுகம் ஸ்கந்தா மோதும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரங்கள் நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டசுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்;

றேயல் (ஏ) எதிர் சென். தோமஸ் (பி) காரைநகர் வி. க. எதிர் தோப்புக்காடு வி. க. (ஏ) இப் போட்டிகள் யாழ். தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெறும்.

## இராசிபலன்

26 - 05 - 1992
செவ்வாய்க்கிழமை
[தமிழுக்கு வைகாசி 13)

நவமி மு. ப. 10-28 வரை, பூரட்டாதி மாலை 6-02 வரை மரணயோகம், இராகுகாலம் காலை 11-52 முதல் 1-22 வரை சுபநேரம், மாலை 4-22 முதல் 5-52 வரை.

மேஷம்; காரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, இனசன நன்மை.

இடபம்; வாக்குவன்மை, தனலாபம், புதிய ஸ்தானம்.

மிதுனம்: குடும்ப மனஸ்தாபம், வைத்திய செலவு, ரோக பயம்.

கடகம்: இனசனப்பகை, அலைச்சல், காரயதாமதம்.

சிங்கம்: ஊக்கமிகுதி, பெரியோர் சகாயம், பணவரவு.

கன்னி: நன்மதிப்பு, நண்பர் உதவி, தொழில் லாபம்.

துலாம்; வாக்குக் கலகம், ஏமாற்றம், பயணத்தடை.

விருச்சிகம்: வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம், யோசனை.

தனுசு: நிலை மாற்றம், அந்நியரால் சுகம், பிரயாசம்.

மகரம்: தடைக் கஷ்டம், அகாலபோஜனம், அவமானம்.

கும்பம்: சத்துரு வெற்றி, தருமச்செலவு, அந்நியருதவி.

மீனம்: ஊக்ககுறைவு, மனையாள்தொல்லை, வெறுப்பு.

– ஜோஸ்யர்.

## காலைநேர பாடசாலைகள்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு சல்விக் கோட்டப்பிரிவில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக மாலைநேரப் பாடசாலைகளாக இயங்கிவரும் சகல பாடசாலைகளும் இம்மாத இறுதிக்குள் காலைநேரப் பாடசாலைகளாக இயங்கவிருக்கின்றன.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்து வந்து சுழிபுரம், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு ஆகிய கொத்தணிகளில் உள்ள சில பாடசாலைகளிலேயே தங்கியிருந்து மாலைநேர வகுப்புக்களை நடத்தி வரும் பாடசாலைகளே காலைநேரப் பாடசாலைகளாக இயங்கவுள்ளன. (139)

## 5000 ரூபா அபராதம்

(நாவற்குழி)

கஞ்சா விற்ற வியாபாரி ஒருவருக்கு சாவகச்சேரி காவல் துறையினர் 5000 ரூபா அபராதம் விதித்தனர்.

கடந்த 9 வருடமாக கஞ்சா வியாபாரம்செய்துவரும் இவருக்கு கஞ்சா விநியோகம் செய்தவரைத் தேடி காவல் துறையினர் வலைவிரித்துள்ளனர். (107)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை. சிவன் கோவிலில் நடைபெற்றுவரும் லட்சார்ச்சனையில் இன்று மாலை 6 மணிக்கு ஆசிரியர் திரு. எஸ். சிவலிங்கராசா சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

(சாவகச்சேரி)

மட்டுவில் கொத்தணி பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் மேற்படி கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (155)

## முதலுதவிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் அடுத்தமாதம் 20ம் திகதி காலை 9-00மணிக்கு முதலுதவிப் போட்டிப் பரீட்சை இடம்பெறும். முதலுதவி அறிவுடைய எவரும் இலவசமாக இப்போட்டியில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் திரு. சி. எஸ். அருட்பிரகாசம், விரிவுரையாளர் உடற்பயிற்சித்துறை, பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி. யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வி)

## அகதிகள் இடமாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் அகதி முகாமிலுள்ள அகதிகள் விரைவில் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படவிருக்கின்றனர். இத்தகவலை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மோகன குருசாமி தெரிவித்தார். [59]

## பாராட்டு வைபவம்

(கொழும்பு)

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற சுவாமி விபுலானந்த அடிகள் நூற்றுண்டுவிழாவில் சுன்னுகம் கதிரமலைச் சிவன் கோவில் பிரதமகுருக்கள் பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களுக்கு "சிவாகம கலாநிதி" என்னும் பட்டம் வழங்கி பாராட்டப்பட்டது. (109)

## 160 மாணவர்களுக்கு சீருடைத்துணி

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்குப்பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினர், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவையாளர்கள் பிரிவுதோறும் தெரிவுசெய்யப்பட்ட 160 மாணவர்களுக்கு இலவசமாக 3 யார் வீதம் சீருடைத்துணிகளை வழங்கிவருகின்றனர்.

மேற்படி செஞ்சிலுவைச் சங்கக் குழு ஒன்று கிராம சேவையாளர் பிரிவுதோறுமுள்ள மாணவர்களில் மிகவும் கஷ்டப்பட்ட 160 பேரைத் தெரிவுசெய்திருந்தனர்.

இந்த மாணவர்களுக்கே 3 யார் வீதம் சீருடைத்துணி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. (139)

## 59 தம்பதிகளுக்கு திருமண பதிவு

(யாழ்ப்பாணம்)

தேசவழமைப்படி திருமணம் செய்த 59 தம்பதிகளுக்கு சட்டப்படி திருமணப் பதிவு செய்துவைக்கப்பட்டது.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ்.டிவகலாலா தலைமையில் றேட்டரிக் கழகத்தின் உதவியுடன் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் போயிட்டி, பூலசிட்டி பகுதிகளில் திருமணம்செய்த 59 தம்பதிகளுக்கு சட்டப்படி திருமணம் செய்யப்பட்டது.

வலி. கிழக்குப் பகுதி பதிவாளர் திரு. சு. தில்லையம்பலவாணர் திருமணப்பதிவை நிறைவேற்றிவைத்தார்.

இவர்களுள் இரு தம்பதிகளுக்கு றேட்டரிக்கழக செயலதிபர் ஈ. சரவணபவனுல் சான்றிதழ் வழங்கப்பட்டது. பதில் தலைவர் திரு. உருத்திரலிங்கம் சான்றிதழ் வழங்கினுர்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சாம்பியனுக ஊரெழு றேயல் விளையாட்டுக்கழகமும், 2-வதுதாக கொய்யாத்தோட்ட ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 3-வதாக நியூ ஸ்ரார் (தீவக) கழகமும் பெற்றது. இவற்றுக்கான பரிசில்களை யாழ மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. அண்ணுத்துரை வழங்கினுர்.

## ஆய்வு வட்டம்

(யாழ்ப்பாணம்)

சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கூட்டம் சனிக்கிழமை தோறும் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெறும்,


வெய்யிலின் உஷ்ணத்திலிருந்து
விடுதலை பெற்று சுறுசுறுப்பாக இயங்க
வாங்கிப் பாவியுங்கள்

**MIXED FRUIT CORDIAL**

மாம்பழம், பப்பாசிப்பழம், அன்னுசிப்பழம்,
எலுமிச்சம்பழம் ஆகியன கொண்டு தயாரிக்கப்பட்ட
TASTYயின் மற்றும் ஒரு உன்னத தயாரிப்பாகும்.

750 ML போத்தலின் விலை
ரூபா 75 - மட்டுமே.

**TasteLine Industries PvtLtd**
No. 14, Seenier Lane, Jaffna.

குறிப்பு:- 1 பங்கு கோடியலுக்கு 4 பங்கு
நீர் சேர்த்து பாவிக்கலாம்.

(ஏ-2168)


## 31-வது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## சண்முகம் வேலுப்பிள்ளை

(செல்வக்குமரன் அரிசி ஆலை உரிமையாளர்)

**தோற்றம்:** 18-01-1912 **மறைவு:** 26-04-1992

**திதி: 26-05-1992**

இணுவிலில் உதித்து ஈஞ்சடியில் மணம்புரிந்து, இல்லறம் என்னும் நல்லறவாழ்வில் பேறுகள் யாவும் நிறையப்பெற்று, அன்புடன் யாவரும் ஐயா! ஐயா! என அழைக்க ஆனந்தமாய் வாழ்ந்து, இன்று அம்மை அப்பன் திருவடி நிழலிலே நிலையான இன்பம் பெற்று ஆனந்தமாய் வாழ சென்றுள்ளீர்.

நீங்கள் என்றும் அம்மை அப்பன் திருவடி நிழலிலே மாறு பேரின்ப பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல அம்மை அப்பனை வாழ்த்தி வணங்கி நிற்கின்றேம்:

26-04-1992ல் அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவன் சண்முகம் வேலுப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய வைபவம் 26-05-1992 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னரது இல்லத்தில் நடைபெறும். அங்கு நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் குடும்பசகோதரராய் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சுதுமலை வடக்கு,
ஈஞ்சடி வயிரவர் கோவிலடி,
மானிப்பாய்.

(சி 6350)

# ஜேர்மனியில் 5வது ஐரோப்பிய இந்து மாநாடு

(பிராங்க்போட்)

ஐந்தாவது ஐரோப்பிய இந்து மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் 28ம் திகதி முதல் 30ம் திகதி வரை ஜேர்மனியிலுள்ள பிராங்க்போர்ட் நகரில் நடைபெறவுள்ளது.

சுவாமி சி.மயானந்தா, சுவாமி சத்தியமித்ரானந், முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜியானி ஜெயில்சிங் ஆகிய பிரமுகர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சமய மற்றும் கல்வித்துறை சார்ந்த நிபுணர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# வீதி விபத்தில் மூவர் காயம்

(நாவற்குழி)

கொடிகாமம் மிருசுவில் வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்களில் கபிரியல் யோகராசா ஆபத்தான நிலையில யாழ்.வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார். க. தர்மராசா, மா. கஜேந்திரன் ஆகியோர் சிறிய காயங்களுடனும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (107)

## நோயாளர் அதிகரிப்பு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்ப ஆசினர் வைத்தியசாலையில் நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளது. வெளிநோயாளர் பிரிவில் தினமும் 200க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (72)

# பஸ் குண்டு வெடிப்பில் இருவர் பலி 40பேர் காயம்

[சென்னை]

காமராஜர் மாவட்டம் விருதுநகர் அருகே தனியார் பஸ் ஒன்றினுள் வைக்கப்பட்ட குண்டொன்று வெடித்ததில் 2 பேர் பலியாகினர். 40 பேர் காயமுற்றனர் என 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

இதேவேளை பஸ் என்ஜினில் ஏற்பட்ட தீப்பொறி காரணமாக பஸ் முற்றாக எரிந்து போய்விட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது. (கே)

# தூரதர்ஷன் நிலையத்திற்கு பலத்த பாதுகாப்பு

(சென்னை)

கும்பகோணம் அருகே உள்ள இந்திய 'தூரதர்ஷன்' தொலைக்காட்சி நிலையத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்புசம்பவத்தையடுத்து அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தொலைக்காட்சி நிலைய வட்டாரத்தில் பொலிசார் மேலதிக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. [கே]

## எழுதுவினைஞர் நியமனம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு இரண்டு எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப்பிரிவிலுள்ள கல்லூரிகளுக்கு ஏழு எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (72)

## சிறுபோக விவசாய செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இரணைமடு குளத்தில் நீரின்மையால் இப்பகுதியில் சிறுபோக பயிர்ச்செய்கை கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருந்தும் பிரமந்தனாறு, கனகாம்பிகைக்குளம், கல்மடுநகர், புதுமுறிப்பு ஆகிய குளங்களை பயன்படுத்தி 325 ஏக்கரில் உபதானிய பயிர்ச்செய்கையும், 3‘8 ஏக்கரில் நெற் செய்கையும் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தீவுப்பகுதியாழ். குடாநாட்டுக்கு வெளியே உள்ள கணித, விஞ்ஞான ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சை இம்மாதம் 30ம் திகதி எட்டுப் பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது, (சு)

# யாழ். நகரில் வங்கியாளர் பரீட்சையை நடத்த அரசு தடை

(யாழ்ப்பாணம்)

வங்கியாளர் பரீட்சையை, யாழ். நகரில் நடத்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது.

கடந்த 23ந் திகதி, மேற்படி பரீட்சை கொழும்பில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகரின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பரீட்சையைப் போக்குவரத்து வசதியீனங்களை முன்னிட்டு யாழ். நகரில் நடக்துவதற்கு முன்னர் ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், கடைசிநேரத்தில் இத்திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் நிலைமை சீரடைந்தால், அடுத்த வருடம் யாழ். நகரில் இப்பரீட்சையை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வி)

# கிறீஸ்தவ கல்லூரியில் மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் விசேட சித்திகள் பெற்ற மாணவர்களைப் பாராட்டியும், வறிய மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசு வழங்கியும் நடத்தப்படும் 'மாணவர் கௌரவிப்பு விழா' நாளை புதன்கிழமை கோப்பாய்க் கிறிஸ்தவக்கல்லூரியில் அதிபர் திரு. த. முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களை திருவாளர்கள் எஸ். இரத்தினராசா, எஸ். சோதிலிங்கம், எஸ். வரதராசா, க. பரமானந்தம் ஆகியோர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்க உள்ளனர்.

வறிய மாணவர்களுக்கான ஊக்குவிப்பு பணத்தினை டாக்டர் வி. தியாகராசாவும் வழங்கி கௌரவிப்பார். இவர் ஒவ்வொரு வருடமும் இரு வறிய மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு ரூபா 70,002/- வழங்கியிருப்பதுகுறிப்பிடத்தக்கது.

# வவுனியா பல்கலைக்கல்லூரியில் மாணவர் தொகை குறைவு

(யாழ்ப்பாணம்)

வவுனியாப் பல்கலைககழகக் கல்லூரியில் 20க்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

பல்கலைக்கழக ஆணைக் குழுவினால் 50 மாணவர்கள் இக் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்டும், கூடியளவு மாணவர்கள் அங்கு படிப்பைத் தொடர முடியாமல் இருப்பதற்கு, அங்கு போதிக்கப்படும் பாடங்களில் ஆர்வம் இல்லாதுதுடன், மேற்படி கல்லூரி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசதியில் அமைந்திருப்பதும் காரணமாக உள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது(சு)

# நாட்டைவிட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான்அதிகாரிகளுக்கு இந்தியா உத்தரவு

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த இரண்டு உயர் அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேறுமாறு இந்தியா உத்தரவிட்டுள்ளது.

இன்றுடன் முடிவடையும் 48 மணி நேரத்தினுள் இவர்கள் வெளியேறிவிட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இவ்விரு உயர்அதிகாரிகளும் இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதகமான முறையில் செயலட்டனர் என்று இந்திய வெளியுறவுத்துறை அறிவித்தது.

இதேவேளை பாகிஸ்தானில் இந்திய தூதரக அதிகாரி ராஜேஸ் மிட்டல் நேற்றுமுன்தினம் பாகிஸ்தானில் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதற்கு இந்தியா பாகிஸ்தானுக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (கே)

# சந்திரசேகரனை ஆஜர் செய்யுமாறு நீதிபதி உத்தரவு

[கொழும்பு]

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரனை இம்மாதம் 28ம் திகதி தம் முன்னிலையில் ஆஜர்செய்யுமாறு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி குணவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

நீதிபதியின் கடந்த 18-ம் திகதிய உத்தரவின்படி சந்திரசேகரன், உபதலைவர் வடிவேல் தர்மலிங்கம், செயலாளர் பாவா அப்துல்காதர் ஆகிய மூவரும் புதிய மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றப்படாமல் தொடர்ந்து 6-ம் மாடியில் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தாக்கல் செய்த மனு ஒன்றின் மீதே நீதிபதி மேற்படி உத்தரவைப் பிறப்புத்துள்ளார்.

வரதனுக்கு புகலிடம் கொடுத்த குற்றச்சாட்டுக்காளாகி இருக்கும் மேற்படி மூன்று எதிரிகளையும் இம்மாதம் 28ம் திகதிக்கு முன் ஆஜர் செய்ய குற்றப்புலனாய்வுத்துறைஇயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் கொட்பிரே குணசேகராவுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ரா)

## பிரபாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர் இந்தியா, திரு.பிரபாகரனை ஒப்படைக்குமாறு குரல் கொடுத்து வந்தாலும், அரசு ரீதியாகத் தற்போதுதான் சம்பிரதாயப்படி திரு. பிரபாகரனை ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளையில், புலிகள் இயக்கம் மீது தடை விதிக்க இயலாதென்றும், திரு. பிரபாகரனைப் பிடிப்பது சாத்தியமற்ற விடயம் என்றும் இலங்கைத் தரப்பில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கே)

## வவுனியா நகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் சிறிலங்கா பொலிஸாரால் அண்மையில் பரவலாக தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நகர்ப்புறத்தில் சிறிலங்கா பொலிஸார் தற்பொழுது தீவிர தேடுதல் வேட்டையை நடத்தி வருவதாகவும் தெரிய வருகிறது. (ரி)

## எதிர்க்கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை பட்டக்களப்பு நகருக்கு விஜயம் மேற்கொண்டது.

ஓட்டமாவடி, பேசாலை சுண்ணன் கிராமம், பதுக்குடியிருப்பு, கல்குடா போன்ற அகதி முகாம்களுக்கும் மேற்படி குழு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேனிப் பகுதியில் அமைந்திருக்கும் இராணுவக் காவலரண்களுக்கும், புலிகளின் காவலரணகளுக்கும்இடையில் மிதிவெடி வைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாககுதல் நடத்தியபோதே மேற்படி இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

ரி 81 ரகத் துப்பாக்கி-1, இதற்குரிய ரவைக கூடு-1, 30 நடுத்தர ரவைகள் இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்டன.

## வவுனியா

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

முற்றாகத் தகர்த்துள்ளதுடன் கைப்பற்றப்பட்ட உழவுயந்திரமும் தீமுட்டி எரிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் ராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதை பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்தின.

இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகளினுல் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம்: ரி 56 புதியரகத்துப்பாக்கி 1 ரி 81 ஒன்று ரகதுப்பாக்கி 1, எஸ். எல். ஆர் ரகதுப்பாக்கி 1, ரி 56 துப்பாக்குரிய ரவைக் கூடுகள் 3, எஸ். எல். ஆர். வரனைட் 1, ஏ. கே. ரவைக் கூடு தாங்கி 1, நடுத்தரரவைகள் 144, நேட்டோ ரவைகள் 20, தலைக்கவசம் 5, சப்பாத்து 18 சோடி, கிட்பாய்க் 8, ராணுவ இடுப்பு பட்டி 12, தண்ணீர் கான் 1, தொப்பி-9. [ரி]

## குமாரி கப்பலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் அனைத்தும் தற்போது துறைமுகப் பகுதியில் தேங்கிக் கிடப்பதாகவும் இதனாலேயே தபாற்பொதிகளும் அனுப்ப முடியவில்லை யென்றும் யாழ். தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. [வி]

## விநியோகம்

(வட்டுக்கோட்டை)

யாழ். கல்வித்திணைக்களத்திலிருந்து சகல கோட்டங்களுக்கும் உதைபந்தாட்ட கரபந்தாட்டப்பந்துகள் வழங்கப்படவுள்ளன. (139)

# யாழ்.குடாநாட்டில் விமானத் தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் குறிப்பாக மக்கள் வாழும் இடங்களில் 'ஷெல் வீச்சு', விமானக்குண்டு வீச்சு போன்றவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தினுல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: தீவுப்பகுதியில் தற்போது தங்கி வாழும் வயோதிபர்கள், நோயாளிகள் குடும்பத்தைப் பிரிந்து வாழ்பவர்களை உடனடியாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்து தருமாறும்—

முகாம்களில் வாழும் மக்கள் மத்தியில் இடம்பெறும் மரணச் சடங்கிற்கு வழங்கப்பட்டு நிறுத்தப்பட்ட உதவித் தொகையை மீள வழங்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை தீவுப்பகுதியில் இருந்து 26 பேர் மட்டுமே, யாழ்ப்பாணத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினுல் கொண்டுவரப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Numbes B/10336/81